**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 215/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
| NAME | சிரஞ்சீவி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 20.01.2026.

**2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் ஓலா கம்பெனியில் டிரைவராக வேலை செய்கிறேன். நான் குட்லவாரிபள்ளியில் தங்கியுள்ளேன். தாவாவில் உள்ள 2 அட்டவணை சொத்துக்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவா அ அட்டவணை சொத்து எத்தனை ஏக்கர் விஸ்தீரணம் என தெரியுமா என்றால் தெரியாது. தாவா அ அட்டவணை சொத்தில் எத்தனை தென்னைமரம் மற்றும் மாமரம் உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது.

2. பி அட்டவணை சொத்து பற்றி தெரியுமா என்றால் போர் போட்டுள்ளது சர்வே எண்.413/2எ2. அதிலுள்ள 40 செண்ட் நிலம் 1ஆம் பிரதிவாதி ராஜி கவுண்டரது ஆண் வாரிசுகளுக்கு பொதுவாக பாத்தியப்பட்டது என்றால் நான்கு பாகமாக பாத்தியப்பட்டது. நான்கு பிள்ளைகள் யார் யார் என்றால் கோவிந்தசாமி, வெங்கடேசன், கோபால், சொக்கலிங்கம். சொக்கலிங்கம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகள் சொக்கலிங்கத்தின் வாரிசுகள் என்றால் சரிதான் அதில் குபேந்திரன் சுமார் 9 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

3. மேற்படி 40 செண்ட் சொத்தை பொதுவாக நான்கு பேரும் அனுபவிக்கும்படி ராஜி கவுண்டர் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான், சொக்கலிங்கத்தை தவிர்த்து 3 பிள்ளைகள் மற்றும் ராஜி கவுண்டர். ராஜி கவுண்டர் இறந்துவிட்டதால் ராஜி கவுண்டர் நிலத்தில் அவரது மகனான சொக்கலிங்கத்திற்கு பாகம் வருமா என்றால் வரும். பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள ஒப்பந்த ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் 2003–ல் எழுதப்பட்டது தேதி, மாதம் தெரியாது.

4. பிரமாண வாக்குமூலத்தில் ஒப்பந்தம் எப்போது எழுதப்பட்டது, யார் எழுதியது, யார் சாட்சி என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றாலும் வாதிக்கு வேண்டியவர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோல் ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றாலும் உண்மையில் இருந்திருந்தால் அதைபற்றிய விவரத்தை சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

5. நான் சொல்வதுபோல் கோபால் மட்டும் போர்வெல் போடவில்லை என்றாலும் நான்கு பேரும் சேர்ந்து தான் போர்வெல் போட்டார்கள் என்றால் கோபால் மற்றும் வெங்கடேசன் சேர்ந்து போர்வெல் போட்டு தண்ணியை அனுபவித்து வந்தார்கள். கிணறு, போர்வெல் மற்றும் பொதுகால்வாயை நான்கு பாகமாக பிரிக்க முடியாது என்றால் சரிதான், 40 செண்ட் இடத்தை பிரிக்க முடியும். பொது பயன்பாட்டிற்காக வைத்துள்ள சொத்தை பிரிக்க முடியாது என்று சொன்னாலும் வாதிக்காக வேண்டி அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH — Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.